உ
அம்பாள் துணை



# நவராத்திரி மகத்துவமும்
# கேதார கௌரி நோன்பு வரலாறும்


கட்டுரை ஆக்கம் :

துர்க்கா துரந்தரி

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, J. P. அவர்கள்

தலைவர்

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான பரிபாலன சபை

தெல்லிப்பழை



வெளியீடு :

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

தெல்லிப்பழை

இலங்கை

*18 – 10 – 82*

# நவராத்திரி மகத்துவம்

''உண்மை யென் றுணர்ந்தநெஞ்சில் ஓடி வந்து நிற்பவள்
நன்மை செய்ப வர்களுக்கு ஞான தீபம் ஆனவள்
மென்மை யான பண்பி னேடு மேவும் அன்புக் காவியம்
பன்மைஒன்றும் பாங்கில் வந்த பாரின் அன்னை வாழ்கவே''

அன்னையை வாழ்த்த அகில உலகமும் வாழும். அவளை ஏன் வாழ்த்துகிறோம். நாம் வாழவேண்டும் என்பதற்காகவே வாழ்த்து கிறோம். அத்தகைய வாழ்த்துக்கும் வழிபாட்டுக்குமுரிய நாட்கள் இந்த நாட்கள். ஒன்பது இரவுகள் எமக்குத் தவப் பொழுதாகும். இரவையே பகலாகக் காணும் சிறப்பு பக்தர்களுக்கு உண்டு; திரு வருளினிடத்திலே எம்மை ஒப்புக் கொடுத்துத் தூங்காமல் தூங்கி நிற்கும் இரவுகள் நவராத்திரி நாட்கள். தேவி உபாசனை, மக்களை மகான்களாக்குகிறது. தரித்திரரைச் செல்வந்தராக்குகிறது. அமங் கலத்தை மங்கலமாக்குகிறது. மூடனை முழுஞானியாக்குகிறது. ஆம்! தேவி பராசக்தியே இவ்வாறு மொழிகிறுள். காண்பது, கேட் பது, மூச்செறிவது உண்மையில் யாவும் என்னுடைய ஆற்ற லால் நிகழ்கின்றன. இந்தப் பிரபஞ்சம் தோன்றும்போது நான் காற்ருகி எப்பொருளிலும் ஊடுருவி நிற்கிறேன் என்பது தேவிசூக்தம்;

எமது சமயத்தை நோக்குமிடத்து விழாவின் தத்துவங்கள் யாவும் நன்மை, தீமைகளுக் கிடையில் நடைபெற்ற போராட்டமாகவே விளக்கம் தருகிறது; எப்போதும் எந்த இடத்திலும் இந்தப் போராட்டம் நிகழ்ந்து கொண்டே இருக்கிறது இதனையே தேவாசுர யுத்தமாகப் புராணங்கள் வர்ணிக்கின்றன. இவ்வாறு ஒரு காலத்தில் நடைபெற்ற தேவாசுர யுத்தத்தில் தேவர்கள் வெற்றி கண்டனர். அதனுல் இறுமாப்புக் கொண்டனர். இந்த இறுமாப்பை அடக்கியவள் அம்பிகை.

மகிடாசுரன் என்பவன் எருமைவடிவங் கொண்டவன். அஞ்ஞான வடிவமே எருமை. இவ்வடிவங் கொண்ட அசுரன் விரும்பியபோது தேவ, மானுட, மிருக வடிவங்களைப் பெறும் சக்தி பெற்றிருந்தான், அவனுக்கு ஒரு பெரிய அசுரப் பட்டாளம் கிடைத்தது. இப்பலங் கொண்டு தேவர்களை எதிர்த்தான். கடும்போர் புரிந்தும் வெற்றி கொள்ள முடியவில்லை; மரணபயமில்லாமல் உடனே போர்புரிய விரும்பினுன். பிரம்மனிடம் சென்ருன். மகிடன் தவம் புரிந்து நின்ருன்.

ஆனுல் பிரமனுல் மரணமில்லாவரம் கொடுக்க முடியவில்லை. வேறு நிபந்தனை கேட்டான். உடனே பெண்ணுல் அன்றி வேறெவராலும் மரணம் நேரக்கூடாது என்றுன் மகிடன். அந்தவரம் கிடைத்தது.

மகிடன் தேவர்களைக் கலக்கினுன். துன்பத்தைத் தாங்கமுடியாது இந்திரன் வியாழபகவானிடம் சென்றுன். அவர் எல்லாம் உணர்ந்தவர். இது பராசக்தியின் லீலை யென்பதைப் புரிந்துகொண்டார். பர தேவதையாகிய சக்தியை மறந்ததால் அசுர சக்திகள் இவர்களுக்கு மேல் ஆதிக்கம் செலுத்துவதை உணர்ந்தார். இப்படி அடிபட்டு நின்றுல்தான் அம்மாவின் நினைவு இவர்களுக்கு வரும் என்பது தேவகுருவின் நினைவு.

உடனே, இந்திரனைப் பார்த்துச் சொன்னுர். இந்திரா; இப்போதுதான் உனக்குத் தெய்வ நினைவு வரத் தொடங்கியுள்ளது. பகைவனின் எழுச்சியில் பகவானின் நினைவு தோன்றும். அகங்காரம் போனுல் அன்றி ஆனந்தம் ஏற்படாது. யுத்தத்தையே தொடர்ந்து செய்து உன்னுடைய கர்ம வினையைக் களைத்து விடு. மகிஷனிடம் சரணுகதி அடையாதே; தெய்வ சகாயத்தை நாடினுல் எல்லாம் வெற்றிகிட்டும் என்று கூறிய வியாழபகவான் இந்திரனையும் அழைத்துக் கொண்டு பிரம்மனிடம் சென்றுர். பின்பு பிரமனேடு சேர்ந்து வைகுந்தம் சென்றனர். ஆனுல் நாராயணன் போரிலே ஊக்கத்தைக் கொடுத்து இந்திரனுக்கு உற்சாகம் ஊட்டினுர். இந்தநிலையில் மகிஷனிடம் இந்தராதி தேவர்கள் போர் புரிய முன்வந்தனர். ஆனுல் மாயப்போரினுல் தேவர்களுடைய பார்வைக்கு எந்தப்பக்கமும் மகுடாசன் காட்சி கொடுத்தான். இந்நிலையில் ஸ்ரீமத் நாராயணன் சக்கரத்தைச் சுழற்ற மகுடனின் மாயரூபம் மறைந்தது. ஆனுல் அவன் சிம்ம வடிவம் எடுத்துக்கொண்டான். உடனே நாராயணன் அவ்விடத்தை விட்டு நீங்க மகுடன் பழைய வடிவத்தை எடுத்தான். இந்திரன் கலங்கித் தன்னுடைய யானையாகியஐராவதமும் திகைத்து நிற்க அங்கிருந்து மறைந்து ஓடிவிட்டான். தேவலோகமே அசுரலோகம் ஆகிவிட்டது. இந்திரன் அரியாசனத்தில் மகுடாசன் அமர்ந்தான். பராசக்தி ஆகிய பரதேவதை தர்மக்கோல் வழுவாமல் இக்காட்சியை நடாத்திக் கொண்டிருந்தாள். மீண்டும் தேவர்கள் பிரம்மனிடம் தஞ்சம் புகுந்து மகுடனுக்குக் கொடுத்த வரம் மிகத் தப்பானது என்பதை உணரவைத்தார்கள். ஆனுல் பிரம்ம தேவர் மகுடனின் முடிவைப்பற்றியும் அது ஒரு பெண்ணுல் ஏற்படும் என்றும் கூறியவுடனே தேவர்கள் கயிலைக்குச்

சென்று பரமேசனை வணங்கி நின்றார்கள். அப்பொழுது இறைவன் பிரம்மனைக்கண்டித்து மகுடாசுரனுக்கு வரம் கொடுத்தது முற்றிலும் தவறு என்பதை உணர்த்தி விட்டார். அதுவுமன்றி நாராயணனிடமே ஆலோசனை கேட்கும்படி அனுப்பிவிட்டார். உடனே நாராயணனைக் கண்டு தமது அவலத்தைத் தேவர்கள் முறையிட்டனர். நாராயணனே அந்த மகாசக்திகளின் லீலைகளை நினைத்துப்பார்த்து தேவர்களை நோக்கி அந்தப் பராசக்தியைத் தியானிக்க வேண்டும் என்று வழி காட்டினார். எல்லோரும் தியானத்தில் ஈடுபட்டனர். ஏன் சிவனும் நாராயணனுமே தியானம் செய்து நிற்க ஒரு பேரொளி அவ்விருவரது முகங்களிலிருந்து தோன்றியது. அற்புதமான புஜபல பராக்கிரமங்கொண்ட தாய்மையின் உரு கற்பனைக்கும் எட்டாத சௌந்தரியப் பிரகாசத்தை வெளிக்காட்டிக் கொண்டு காட்சியளித்தது. அம்மா வந்துவிட்டாள். மகிடன் மடிந்தான் என்று தேவர்கள் ஆனந்தமடைந்தனர். பரமேஸ்வரன் சூலாயுதத்தை அம்பாளுக்கு அளித்தார். நாராயணன் ஒரு சக்கரத்தைக் காணிக்கையாகக் கொடுத்தார். இமவான் சிங்கவாகனத்தைக் கொடுத்தான்; சிம்மானேஸ்வரி என்ற பெயர் இவள் ஒருத்திக்குத்தானே உண்டு. அஞ்ஞான வடிவமான மகிடனை வதைக்க ஞானம்பிகை தோன்றினாள். மகிடன் அடங்கினான். அவனையே நல்லுணர்வு கொடுத்து வாகனமாகவும் ஏற்றுக்கொண்டாள்; மகிடாசுரனை வதைத்த அட்டமி, நவமி தினங்களைச் சாக்தர்கள் நவராத்திரியில் மிகப்புண்ணிய காலமாகக் கருதுகின்றனர். துர்க்கை மகாலட்சுமி அட்டமி நவமி கூடும் வேளையில் மகிடவதம் செய்ததால் இவ்விரு திதிகளும் விசேடம் பெற்றன. மகிடவதத்தின்பின் தேவர்கள் உடனேயே அம்பிகையின் ஆக்ஞையை முன்னிட்டுத் தமது ஆயுதங்களை அவள் அடியில் வைத்துப் பூசித்தார்கள். அடுத்த தினமாகிய விஜயதசமி என்பது தேவி தனது அவதார காரியம் முடிந்தபின் உருக்கரந்த தினமாகும். தான் மறைந்ததாக அவர்கள் வருந்தாவண்ணம் தன் நினைவை அவர்களுக்கு வெகு அழுத்தமாகத் தந்து தேவருலகில் அவர்கள் வெற்றி விழாக் கொண்டாடுமாறு இந்த ஜகந்மாதா அருளிய தினம் விஜயதசமி. விஜயம் என்றால் வெற்றி, பொதுவாகப் பெரியோரது வருகையை விஜயம் என்கிறோம். ஆனால் அம்பிகையின் போக்கிலே (திரும்புதல்) இவ்விழா எடுக்கப்படுகிறது. அவள்அசுரரை மட்டும் வெல்லவில்லை. தேவர்களின் இறுமாப்பையும் வென்றாள். இவ்வெற்றியின் காரணமாக அவளுக்கு சண்டி, சண்டிகா என்ற நாமங்களுண்டு; அதாவது தீவிரமாகத் துளும்பும் மூர்த்தி அவளே; இவளே

துர்க்காதேவி. துர்க்கதியிலிருந்து எம்மை மீட்பவள் இவளே. எனவே இத்தேவியை அர்க்கியம், அலங்காரம், சுகந்தம், சந்தனம், மலர் அட்சதை, தூபம், தீபம் ஆகியவற்றால் பூசிப்பாயாக என ஞானிகள் வழிகாட்டியுள்ளனர். இவ்வாறு சின்மயமான தேவியுடன் வழிபாட்டினால் தன்மயமாகி விடவேண்டும். மகிடாசுரனின் பீடரியில் தன்னடிகளை ஊன்றிநிற்கும் எழில்மிகு வடிவத்தையே துர்க்காதேவியின் எழில் விக்கிரமாகக் காண்கிறோம். மர்த்தனம் என்பது அரைப்பது. அதாவது கெட்டியான தன்மை கரைகிறது. மகிடன் அடங்கினான் என்பதும் இதுவே. நம் திருக்கோயிலில் சங்கு சக்ரா தாரணியாக விஸ்ணுசக்தியாக அம்பாள் விளங்குகிறாள். ஞானபராசக்தி அன்பில் ஆனந்த ரூபிணியாக சிம்மத்தில் இவர்ந்து துதிகளைச் செவிமடுத்து அருள் புரிந்தாள் என்பது நவராத்திரி விழாவின் பயனாகும். நவ ராத்திரி தினங்களில் இத்துதியை நாம் மேற்கொண்டு விரத அனுட்டான சீலர்களாக வாழ்ந்து எமது அஞ்ஞானத்தை நசித்து மெய் ஞானத்தைப் பெருக்கிக் கொள்வோமாக.

## முதல் மூன்று தின உபாசனைக்கு

அரணம் பொருளென் றருளொன் றிலாத அசுரர் தங்கள்
முரணன் றழிய முனிந்தபெம் மானும் முகுந்தனுமே
சரணம் சரணம் எனநின்ற நாயகி தன்னடியார்
மரணம் பிறவி இரண்டுமெய் தார்இந்த வையகத்தே.

பயிரவி பஞ்சமி பாசாங் குசைபஞ்ச பாணிவஞ்சா
உயிரவி உண்ணும் உயர்சண்டி காளி ஒளிருங்கலா
வயிரவி மண்டலி மாலினி சூலி வராகியென்றே
செயிரவி நான்மறை சேர்திரு நாமங்கள் செப்புவரே.

## இடை மூன்று நாள் உபாசனைக்கு

தண்ணளிக் கென்றுமுன் னேபலி கோடி தவங்கள்செய்தார்
மண்ணளிக் கும்செல்வ மோபெறு வராமதி வானவர்தம்
விண்ணளிக் கும்செல்வ மும்அழி யாமுத்தி வீடுமன்றோ
பண்ணளிக் கும்சொல் பரிமள யாமளைப் பைங்கிளியே.

நயனங்கள் மூன்றுடை நாதனும் வேதமும் நாரணனும்
அயனும் பரவும் அபிராம வல்லி அடியிணையைப்
பயனென்று கொண்டவர் பாவையர் ஆடவும் பாடவும்பொன்
சயனம் பொருந்து தமனியக் காவினில் தங்குவரே.

## இறுதி மூன்று நாள் உபாசனைக்கு

கண்களிக் கும்படி கண்டுகொண்டேன் கடம் பாடவியில்
பண்களிக் குங்குரல் வீணையும் கையும் பயோதரமும்
மண்களிக் கும்பச்சை வண்ணமு மாகி மதங்கர்குலப்
பெண்களில் தோன்றிய எம்பெரு மாட்டிதன் பேரழகே.

அருணும் புயத்துமென் சித்தாம் புயத்தும் அமர்ந்திருக்கும்
தருணும் புயமுலைத் தையல்நல் லாள்தகை சேர்நயனக்
கருணும் புயமும் வதனும் புயமும் கராம்புயமும்
சரணும் புயமுமல் லாற்கண் டிலேன்ஒரு தஞ்சமுமே.

## பொது

துடைத்தா யிலேவன் கலிநோயை என்னைத் தொழும்புசெய்யப்
படைத்தா யிலேவந்து பார்த்தா யிலேஉள்ளப் பள்ளத்தில்விட்டு
அடைத்தா யிலேஉன் கருணைப்பிர வாகத்தை ஐவரைவிட்டு
உடைத்தாய் உலகம்மே நன்று யிலேஎன் உயிர்ப்பயிரே.

போத நாயகி புவனநாயகி எண் புயங்கநாயகி இருஞ்சாம
கீத நாயகி எங்கிளைக்கு நாயகிவான் இருபைநாயகி உலகளிக்கும்
பேத நாயகி விண்ணவர்க்கு நாயகி மால் பிரமநாயகி நறுக்கமல
பாத நாயகி என்னுள்ளுவார் ரகமும் பவமெனும் பாவம்கண்டிடுமோ

சுரும்புமுரல் கடிமலர்ப்பூங் குழல்போற்றி உத்தரியத்
தொடித்தோள் போற்றி
கரும் புருவச் சிலை போற்றி கவுணியர்க்குப் பால் சுரந்த
கலசம் போற்றி
இருப் புமனங் குழைத்தென்னை யெடுத்தாண்ட அங்கயற் கண்
ணெம்பி ராட்டி
அரும் புமினை நகைபோற்றி ஆரணநூ புரஞ்சிலம்பும்
அடிகள் போற்றி.

# ஸ்ரீ சக்கர பூஜை

அம்பிகை வழிபாட்டில் யந்திர பூஜை முறையில் வழிபடுவது சிறப்பானதும், சக்திமிக்கதும் ஆகும். சிவகோணங்கள் நான்கும் சக்தி கோணங்கள் ஐந்தும் ஆக ஒன்பது கோணங்கள் இணைந்து ஒன்றையொன்று வெட்டுவதால் மொத்தம் நாற்பத்துமூன்று கோணங்கள் உண்டாகின்றன. அதன் நடுவணையில் 'பிந்து' மண்டலம் என்ற இடத்தில் அம்பிகை எழுந்தருளுகிறாள். எல்லாச் சக்கரங்களையும் விட (யந்திரங்களையும் விட) அன்னை உறையும் ஸ்ரீ சக்கரம் தலையாயது. எனவே அதனை 'சக்கர ராஜம்' (சக்கரங்களுக்குள் அரசன்) எனப் போற்றுகின்றனர். ஒளி நின்ற கோணங்கள் ஒன்பதால் உண்டாகும்; இந்த ஸ்ரீசக்கரத்தில் அனைத்துத் தத்துவங்களும் அடக்கம். குறிப்பாகக் கூறின் இன்றைய அணுசக்தி விஞ்ஞானமும் அடக்கம். அவற்றினைச் சுருக்கமாகவும் தொகுத்தும் ஆராய்வோம்.

ஒன்பது முக்கோணங்களில் கீழ்நோக்கிய முக்கோணங்கள் ஐந்தும் சக்தி கோணங்கள் எனப்படும். மேல்நோக்கிய முக்கோணங்கள் நான்கும் சிவகோணங்கள் எனப்படும். இவை இணைந்து வெட்டுவதால் உருவாகும் 43 கோணங்களைக் கொண்ட ஸ்ரீ சக்கரம் சிவசக்தி ஐக்ய பாவத்தை யுணர்த்தும் யந்திரமாகும்.

வழிபடுவோரின் குறிக்கோளும் எண்ணங்களும் உயர்ந்தனவாகவே இருத்தல் வேண்டும் என்பதனை மேல் நோக்கிய கோணங்கள் குறிக்கின்றன. அவ்வாறு வழிபடுவோரின் எண்ணமுங் குறிக்கோளும் உயர்ந்தனவாயின் இறைவி கீழ்நோக்கி இறங்கி வந்து அருள் பாலிக்கிறாள் என்பதனைக் கீழ்நோக்கிய கோணங்கள் குறிக்கின்றன.

கடவுட்தத்துவம் எங்கும் வியாபித்து இருக்கிறது. அவ்வாறே நமது உடலிலும் வியாபித்திருக்கிறது. அதனையே "அண்டத்தில் உள்ளது பிண்டத்தில் உண்டு" என மேலோர் கூறினர். நமது உடலினைப் 'பிண்டாண்டம்' என்றும் ஏனைய உலகனைத்தையும் 'ப்ரம்மாண்டம்' என்றும் கூறுவர். அகில உலகங்களிலும் அன்னை எழுந்தருளியிருக்கிறாள் என்ற பாவனையில் ஸ்ரீசக்கர வழிபாடு நடத்துவது ஒரு முறையாகும்.

நீர், நிலம், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய ஐந்தினையும் சக்தி கோணங்களாகவும், மாயை, சுத்தவிந்தை, மகேச்சுவரன், சதாசிவன் ஆகிய நான்கு தத்துவங்களையும் சிவகோணங்களாகவும் கொண்டு அதனை வரிவடிவில் குறிக்கும் தெய்வீகச் சின்னமாக ஸ்ரீசக்கரத்தினைக் கொண்டு வழிபடுபவர். அதாவது மேற் கூறிய ஒன்பது தத்துவங்களின் வடிவே ஒளிநின்ற கோணங்கள் ஒன்பது ஆகும். அவற்றில் சக்தி வியாபகமாகவிருக்கிறாள் என்பது கருத்து.

நமது உடலினையே அம்பிகை எழுந்தருளும் ஸ்ரீசக்கரமாகப் பாவித்து வழிபடும் முறையினை 'பவனோபநிஷத்' என்னும் உபநிடதம் விளங்குகிறது.

தோல், இரத்தம், மாமிசம், கொழுப்பு, எலும்பு ஆகிய ஐந்தினையும் சிவகோணங்களாகக் கருதவேண்டும். மஜ்ஜை (எலும்பின் உள்ளே உள்ள சத்துர) சுக்லம், பிராணன், ஜீவன் ஆகிய நான்கினையும் சிவகோணங்களாகக் கருதுதல் வேண்டும். இவ்வொன்பது தாதுக்கள் அடங்கிய நம் உடலினை ஸ்ரீசக்கரமாகப் பாவித்து இதயமாகிய பிந்து ஸ்தாபனத்தில் இறைவியைப் பூஜித்தலே பிண்டாண்ட முறையாகும். ''நான் யந்திரம், நீ யந்திரத்தில் எழுந்தருளும் தெய்வம்'' எனக் கூறி இராமகிருஷ்ண பரமஹம்சர் இங்ஙனம் இறைவியினைச் சரீரமாகிய ஒன்பான் கோணத்தில் எழுந்தருளச் செய்து வழிபட்டார், அபிராமிபட்டரும் அதே முறையில் 'பாவனோபநிஷத்' என்னும் வேதக் கொழுந்து காட்டிய முறையிலேயே அன்னையினை உள்ளே வழிபட்டார். வெளியே மட்டும் வழிபட்ட மற்றவர்களுக்கு அவர் 'பித்தர்' போலக் காணப்பட்டார். இராமகிருஷ்ணரையும் முதலில் மக்கள் பித்தரெனக் கருதினர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறு சிவசக்தி எழுந்தருளும் நவகோணமாக தமது உடலினை எண்ணிய அடியார்களையே திருமூலரும் ''நடமாடக் கோயில் நம்பர்'' எனப் போற்றினர். அண்டங்கள் முழுதும் எழுந்தருளுபவளே ஒன்பது தாதுக்களாலான நமது உடலிலும் உறைகிறாள் என்பது திரண்ட கருத்து.

துருவாசமகரிஷி எழுதிய 'ஸ்ரீ நகர விமர்சனம்' அல்லது 'லலிதா ஸ்தவ ரத்னம்' என்ற நூலில் அம்பிகை ஸ்ரீ நகரத்தில் ஸ்ரீ சக்கரத்திடை எழுந்தருளியிருப்பதை வருணிக்கிறார். ஒன்பது கோணங்கள் இணைந்து வெட்டுவதால் உருவாகும் சக்கரம் அல்லது யந்திரம் ஸ்ரீ சக்கரம் எனப்படுகிறது. அதுவே பிம்பமாக — சிற்பமாக உருவாகும்.பொழுது 'மேரு' என அழைக்கப்படும்.

பண்டாசுர யுத்தத்தின் பொழுதும் அன்னை ஒன்பது கோணங்களைக் குறிக்கும் ஒன்பது தட்டுக்கள் கொண்ட தேரின் மீது எழுந்தருளி வந்தாள். ''சக்ர ராஜ ரதாரூட சர்வாயுத பரிஷ்க்ருதா'' ஸ்ரீ சக்கரத் தேரினில் எல்லா ஆயுதங்களும் புடைசூழ விளங்குபவள் என சகஸ்ர நாமம் கூறும்; அதாவது நமது சரீரமென்னும் நவ தாதுக்களால் உருவான தேரில் எழுந்தருளி வந்து தீக்குணங்களாகிய பண்டாசுரனை அழிக்கின்றாள் என்பதே இதன் உட்கருத்து.

''ஸ்ரீ சக்ர ராஜநிலையா'' — ஸ்ரீ சக்ரமாகிய ஒன்பான்கோணத்தில் உறைபவள்'' எனவும் சகஸ்ரநாமம் புகழும்.

ஒளி நின்ற கோணங்கள் ஒன்பதும் என்பதனை ஒன்பது ஆபரணங்கள் எனப் பொருள் கொண்டாலும் பொருந்தும். ஏனெனில், நவ ஆவரணங்களிலும் அன்னையே ஒன்பது பெயர்களுடன் ஆங்காங்கே எழுந்தருளுகின்றாள்.

அன்னைக்குரிய யந்திரமாகிய ஸ்ரீ சக்கரம் அணுசக்தி விஞ்ஞானத்தின் வரைபடமே எனலாம். அணுவுக்குள் 'எலக்ட்ரான்'கள் என்னும் நுண் கூறுகள் அலை அலையாய்ச் சுழன்றுகொண்டேயிருக்கின்றன. 'ப்ரோட்டான்'கள் குறுக்கும் நெடுக்குமாகச் சுழன்று கொண்டிருக்கின்றன. நடுவில் உட்கரு அமைகிறது. அந்த உட்கரு அல்லது நியூகிளியஸ் (Nucleus) என்ற இடத்திலிருந்தே 'நியூகிளியார் எனர்ஜி' அல்லது சத்தி கிடைக்கிறது என்பது தற்கால விஞ்ஞானம்;

ஸ்ரீ சக்கரத்தில் கோணங்கள் குறுக்கு நெடுக்காக இயங்கும் 'ப்ரோட்டான்'களைக் குறிக்கின்றன; வெளியில் வரையப்படும் தாமரை இதழ்கள் போன்ற வட்டங்கள் அலை அலையாய்ச் சுழன்று கொண்டிருக்கும் 'எலக்ட்ரான்'களைக் குறிக்கின்றன. நடுவில் உள்ள பிந்து என்னும் புள்ளி 'நியூகிளியசை'. குறிக்கிறது. அப்பிந்துவே சக்தியின் இருப்பிடம் என்கிறது. நமது மெஞ்ஞானமும். ஆகவே அணுசக்தி அறிவியலும் அன்னையின் மெஞ்ஞானமும் வேறல்ல என்பதை உணர்ந்து ஸ்ரீ சக்கர பூசையின் மூலம் தேவியைப் பூஜிப்போமாக,

# கேதார கௌரி நோன்பு

வவ்விய பாதத்(து) இறைவரும் நீயும் மகிழ்ந்திருக்கும்
செவ்வியும் உங்கள் திருமணக் கோலமும் சிந்தையுள்ளே
அவ்வியம் நீர்த்தென்னை ஆண்டபொற் பாதமும் ஆகிவந்து
வெவ்விய காலன்என் மேல்வரும் போது வெளிநிற்கவே.

கைலையங்கிரியின் சிகரத்தில் உமாசமேசதராய் விளங்கும் பரமசிவன் பக்தகோடிகள் தரிசிக்கும் பொருட்டு தேவசபை ஒன்றை ஏற்படுத்தி அதிலே வீற்றிருக்கின்றார்.

அங்கே தேவவாத்தியங்கள் முழங்க கிருதாசி, மேனகை முதலிய தேவமாதர்கள் நாட்டியம் ஆடிக்கொண்டிருக்கின்றார்கள். அதிலே நடன ஸ்திரீகளில் சவுந்தர்யம் மிக்கவளாகிய அரம்பையானவள் அற்புதமான நடன விசேஷங்களை நடித்துக் காட்டுகின்றாள்.

அப்பொழுது அந்தரங்க பக்தராகிய பிருங்கிமகரிஷி பக்தியோடு விசித்திரமான விகடநாட்டியம் ஒன்றை ஆடிக்காட்டுகின்றார். பார்வதிதேவியும் அங்கே இருக்கிறாள், தேவர்கள் ஆனந்தத்தால் சிரித்து மகிழ்கிறார்கள்.

பார்வதக்குகை அச்சிரிப்பொலியால் கலகலவென எதிரொலிக்கின்றது. பரமசிவனும் பிருங்கியின் நாட்டியத்தில் மூழ்கித்திளைத்து மகிழ்கிறார். பரமசிவனின் அனுக்கிரகமும் பிருங்கி மகரிஷிக்குக் கிடைக்கிறது. அதைக் கண்டு சபையிலுள்ளோர் பிருங்கி மகரிஷியைக் கௌரவித்துப் பாராட்டுகிறார்கள், அந்த நேரத்தில் பிருங்கி மகரிஷி பயபக்தியோடு பார்வதியை நீக்கிப் பரசிவனை மாத்திரம் வலம் வந்து வணங்குகின்றார். இதைக் கண்டு,

''சுவாமி, இந்த பக்தன் என்னை விட்டுத் தங்களை மட்டும் வணங்கிச் சென்றாரே, அதற்குக் காரணம் என்ன? இந்த ஆச்சரியமான விஷயத்தை எனக்கு விளக்க வேண்டுமென்று தேவி கேட்கின்றாள்,

''தேவி' சிவயோகியாகிய பிருங்கிமகரிஷி முக்தி நிலையை விரும்பி நிற்பவர். அதை அடைவதற்கு உன்னை வணங்குவதால் பிரயோசனமில்லையென்ற திடசித்தங் கொண்டவர். அதனாற்றான் உன்னை விட்டு என்னை மாத்திரம் வணங்கிச் சென்றார்'' என்று பரமசிவன்

பார்வதிக்கு விளக்கம் கூறுகின்றார். பார்வதிதேவி வருத்தப்பட்டு பரமசிவனிடத்துக் கோபம் கொள்கிறாள். கோபாவேசத்தில் தனது சக்தியின் கூறு பிருங்கிரிஷியினின்றும் அகலக்கடவது என்று வாய் விட்டுக் கூறியும் விடுகின்றாள். பிருங்கிரிஷியின் உதிரம் பிழிந்து சக்கையாகிறது. அவர் நிற்பதற்கும் முடியாமல் தள்ளாடுகின்றார். அப்போது பரமசிவன் பிருங்கியின் கையில் தண்டொன்று வரச் செய்கின்றார், பிருங்கி தண்டின் உதவியோடு தன் ஆச்சிரமம் போய்ச் சேர்கிறார்.

தேவிக்கு மேலும் கோபம் உண்டாகிறது. கைலையை விட்டு நீங்கிப் பூலோகத்துக்கு வருகிறாள். வால்மீக மகரிஷி சஞ்சரிக்கிற பூங்காவனத்தில் ஓர் விருட்சத்தின் அடியில் அமர்ந்திருக்கிறாள். அந்த இடத்தில் 12 வருடம் மழையின்றி வாடிக் கிடந்த விருட்சங்களெல்லாம் மலர்ந்து மணம் வீசுகின்றன. வால்மீக மகரிஷி அவ் வனத்துக்கு வருகிறார். பன்னிரண்டு வருடம் மழையில்லாமல் வாடிக் கிடந்த விருட்சங்களெல்லாம் தளிர்த்துப் பூத்து மணம் வீசு வதைக் கண்டு அதிசயிக்கிறார், வனத்தில் இந்த அற்புதம்! அங்கு வந்திருப்பவர் யாராயிருக்கலாம் என்று தேடிப் பார்க்கின்றார். பார்வதிதேவி ஒரு வில்வ விருட்சத்தின் அடியில் எழுந்தருளி யிருப்பதைக் காண்கின்றார்.

தேவி, தாங்கள் கைலாசகிரியை விட்டு இப்பூலோகத்திற்கு எழுந்தருள் வதற்குக் காரணமென்ன? என்று கேட்டு விடுகிறார். தேவி தான் பூலோகத்துக்கு வந்த கதையைச் சொல்கிறாள். வால்மீக மகரிஷி தேவியைத் தனது ஆச்சிரமத்துக்கு அழைத்துச் செல்கிறார் தேவியும் ஆச்சிரமத்துக்குச் சென்று வால்மீக ரிஷி தேவிக்கெனத் தனியாக அமைத்துக் கொடுத்த ஆச்சிரமத்தில் நவரத்தின சிம்மா சனத்தில் வீற்றிருந்து, "மகரிஷியே, பூலோகத்தில் நான் விரதம் ஒன்று அனுட்டிக்க வேண்டும். மேலான வீரதம் ஒன்று இருக்குமே யானால் அதனை எனக்குக் கூறுங்கள் என்கிறாள். மகரிஷி, "தாயே தாங்களே விரதமுகத்தோடு எழுந்தருளியிருக்கிறீர்கள். அதை விடவா பூலோகத்தில் சிறந்த விரதமொன்றுண்டு." என்று கூற தேவி, புன்னகை பூத்து தன் விரதத்தை ஆலவிருட்சத்தின் கீழமர்ந்து ஆரம்பிக்கிறாள். மணலினாலே லிங்கம் பிடித்து ஈஸ்வர னாகப் பாவித்து பூஜை செய்கின்றாள். 21 நாள் பூசை நிகழ்கின்றது. 21 பழம், 21 அதிரசம், 21 வெல்லவுருண்டை, 21 சந்தனஉருண்டை 21 மஞ்சளுருண்டை நைவேத்தியமாக வைத்து தூய தீபம் காட்டி வணங்குகிறாள். 21 இழை எடுத்துத் திரித்து 21 முடி முடித்து ஈஸ்வரனைத் தியானம் செய்து காப்புங் கட்டுகிறாள். காப்பணிந் ததும் பரமசிவன் பார்வதிக்குக் காட்சி கொடுத்து "தேவி உமக்கு

என்ன வரம் வேண்டும்'' என்று கேட்கிறார்; தேவி ஈசனைப் பார்த்து ''உமது தேகத்தில் பாதி எனக்கருள வேண்டும்'' என்று கேட்டு விடுகிறாள், 'ஆகட்டும்' என்கிறார் ஈஸ்வரன். பார்வதி தேவியும் பரமசிவன் மேனியில் பாதியாய் இருக்கும் பாக்கியத்தையும் பெறுகிறாள்.

''என்னை நோன்பு நோற்று வரம்பெற்ற உன்னை நோக்கி யார் இந்த 21 நாட்களும் விரதம் அனுட்டிக்கிறார்களோ அவர்கள் உன் மூலம் சகல சௌபாக்கியங்களையும் அடைவார்கள்'' என்று வரமும் நல்கி பரமசிவன் பார்வதி சமேதராய் அர்த்தநாரீஸ்வரவடிவத்தோடு கைலயங்கிரிக்கு எழுந்தருளினார். அதிலிருந்து கௌரி நோன்பு பூலோக வாசிகளால் அனுட்டிக்கப்பட்டு வருகின்றது. இக்கௌரி நோன்பை அனுட்டித்து கைமேல் பலன் கண்டவர் பலர்.

நோன்பு நோற்று வரம் பெற்ற பராசக்தியை நோக்கி இவ் விரதம் அனுட்டிக்கப்படுவதால் இது கௌரி நோன்பென அழைக்கப்படுகின்றது. இவ் விரதத்தின் அங்கங்களாக அமைந்தவை சங்கற்பம், அபிஷேகம், நைவேத்தியம், தூபம், தீபம், அர்ச்சனை, வலம்வருதல் என்பனவாகும். ஆகவே இவற்றை ஒவ்வொருவரும் தாமாகவே செய்து விரதத்தை நிறைவேற்றுதல் விரும்பதக்கதாகும். விரும்பினால் அவரவர் இல்லங்களிலும் இதனைச் செய்து கொள்ளலாம். ஆனால் புனிதமான சூழ்நிலையமையவேண்டும். இலிங்கத்தின் அருகில் அம்பாள் திருவுருவையும் வைத்து அலங்கரித்துப் பூசை செய்தல் மேலானது. 21 நாள் இவ் விரதத்தை அனுட்டிக்க முடியாதவர்கள் இறுதி நாளில் எல்லாப் பூசையையும் முடித்துக் கொள்ளலாம், ஆனால் வருடாவருடம் தொடர்ந்து அனுட்டிப்பதே முக்கியமானதாகும். இதனால் வாழ்க்கைப்பேறு, முத்திப்பேறு ஆகிய இரு பெரும் பேறுகளும் கிட்டும் என்பதில் சந்தேகமில்லை என்பதைக் கௌதம முனிவர் தெளிவாக எடுத்துக் கூறுகிறார்.

எமது கண்கண்ட தெய்வமாகிய துர்க்காதேவி கோயில் கொண்டருளும் தெல்லிப்பழையில் கடந்த பல ஆண்டுகளாக இவ் விரதத்தை அடியார்கள் அனுட்டித்து வருகிறார்கள். ஐப்பசி அமாவாசையிலன்று இது ஒரு கண்கொள்ளா அருட்காட்சியாகும். அம்பாள் அடியார்கள் அனைவருக்கும் மேலும் மேலும் இத்தகைய ஆனந்த அனுபவம் கிடைக்கப் பிரார்த்திப்போமாக.

 உ

# துர்க்கை அம்பாள் பிள்ளைத்தமிழ்

கையாற் பிசைந்து கண்துளும்பக்
கதறி நெடுங்கோ புரம்பார்த்த
காதற் குழந்தைக் காயிரங்கிக்
கனமார் முலைப்பால் கறந்தளித்த
மையார் கண்ணி மனநிலைத்து
வழுத்தும் பன்னாள் வளர்தவத்தில்
மன்னும் பார்த்தன் வரங்கொள்ள
மணவற் கின்னருள் வாய் மலரும்
கையாள் வளையற் காரணியே
காய மழிந்தும் கருத்தழியாக்
கதியாண் நாவுக் கரசற்குக்
கைலை காட்டக் கணவனுடன்
ஐயா றமர்ந்த மடப்பிடியே
அருள்வாய் முத்தந் தருகவே
அழகார் தெல்லி நகர்த்துர்க்கை
யம்மா முத்தந் தருகவே.

337

திருமகள் அழுத்தகம், சுன்னுகம்.—5262/10-82.